# யாழ்.-மீசாலைப் பகுதிகளில் புக்காரா தாக்கு!

(யாழ்ப்பாணம்)
புக்காரா விமானம் ஒன்று நேற்று யாழ்ப்பாணம், மீசாலை பகுதிகளில் குண்டு வீச்சு தாக்குதல்களை மேற்கொண்டது. இதில் [illegible] சேர்ந்த ஆசீர்வாதம் யேசுராசா (38 வயது), யாழ்ப்பாணம் கண்டி வீதியைச் [illegible]
(4-ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 8 இதழ் 279
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23-11-1993

## புலிகள் தாக்குதலையடுத்து கிழக்கில் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும்?

(கொழும்பு)
கிழக்கில் விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர் மீது மேற்கொண்ட தாக்குதல்களையடுத்து, அங்கு நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படலாம் என ஏஜென்ஸிச் செய்திகள் தெரி[illegible]
(4ம் பக்கம் பார்க்க)

## தேர்தலுக்கு அரசு எதிரணியினர் எதிர்ப்பு

(கொழும்பு)
கிழக்கு மாகாணத்தில் அரசு நடாத்த திட்டமிட்டுள்ள தேர்தலுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும், அரசாங்க உறுப்பினர்களும் பலத்த எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.
(4-ம் பக்கம் பார்க்க)

# ★ பூநகரி அழிவை அடுத்து- யாழ்.-கிளிநொச்சி பகுதிகளுக்கு கூட்டுப்படை அணி அமைப்பு!

## பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன தளபதி!!

(கொழும்பு)
யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய இரு மாவட்டங்களுக்குமென புதிய ஒருங்கிணைப்புப்படை அணி ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டு நடவடிக்கைகள் படை அணி என அழைக்கப்படும் இந்தப் புதிய பிரிவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய 2 மாவட்டங்களையும் ஒருங்கிணைத்து, அவற்றின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். இந்தப் படை அணியின் தளபதியாக பிரிகேடியர் அசோகா கே. ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப்புலிகள் பூநகரி இராணுவத்தளம் மீது அண்மையில் மேற்கொண்ட மிகப் பாரிய தாக்குதலையடுத்து, யாழ்ப்பாணம் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள தமது படைப்பிரிவுகளைப்பாது காத்துக்கொள்ளும் முகமாகவும் இந்தப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும் விதமாகவும் அரசாங்கம் இந்தப்படையணியை அமைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.
(4-ம் பக்கம் பார்க்க)

## பூநகரி தாக்குதலில் பலியான படையினர்

(கொழும்பு)
பூநகரி படை முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 754 படையினர் பலியானதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.
(4-ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் வாரம்: 2-ம் நாள் நிகழ்வுகள் உணர்வுடன் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)
தமிழீழ விடுதலைக்காக தம்மை அர்ப்பணித்துள்ள மாவீரர்களை நினைவு கூரும் மாவீரர் வாரத்தின் 2ம் நாள் நிகழ்வுகள் தமிழீழம் எங்கும் உணர்வுபூர்வமாக நேற்று
(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தில் மாற்றம் புதிய தளபதிகள் நியமனம்

(கொழும்பு)
இராணுவப் படைப்பிரிவில் புதிதாக பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. புதியவர்கள் பல உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் விபரம் வருமாறு: மணலாறு படைப்பிரிவின்
(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழர் பகுதிகளில் புதிய படை முகாம்கள்

(திருமலை)
திருமலை மாவட்டத்தில் உள்ள மூதூர்ப்பகுதியில் தமிழர் வாழும் பகுதிகளில் புதிய இராணுவ முகாம்களை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் துரிதமாக ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது.
இராணுவத்தினரின் இம் முயற்சியைபடுத்து இப்பகுதி வாழ் தமிழர்கள் பெரும்
(4-ம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
நேற்று வரை தடைப்பட்டிருந்த கிளாலி—பூநகரி படகுச் சேவை, இன்று 23ம் திகதி முதல் வழமையான நேரத்திற்குத் தொடர்ந்து நடைபெறுமென விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மாவீரர் வாரத்தில் புலிகள் கொழும்பையும் வவுனியாவையும் தாக்கலாம்!

### பாதுகாப்பு வட்டாரங்கள் அச்சம்

(கொழும்பு)
மாவீரர் வாரத்தின்போது விடுதலைப் புலிகள் கிழக்கு மாகாணம் மற்றும் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள வவுனியா போன்ற பகுதிகளில் தாக்குதல்களை நடத்தி, அவற்றைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரலாம் எனப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.
அத்துடன் கொழும்பு மாநகரில் குண்டுகளை வெடிக்கச் செய்வதற்கும் விடுதலைப் புலி
(4-ம் பக்கம் பார்க்க)

## ராஜதந்திர உறவுகள் ஆரம்பம்

(புதுடில்லி)
இந்தியாவும் தென் ஆபிரிக்காவும் 40 வருடங்களின் பின்பு நேற்று முதல் மீண்டும் ராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன
(வி-இ)

## களனிப் பகுதியில் 30 புலிகள் கைதாம்

(கொழும்பு)
விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனச் சந்தேகத்தின்பேரில் 30 இளைஞர்கள் களனிப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.
களனி பொலிஸ் பகுதிக்குப் பிரவேசித்த இ வர்கள், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நளின் தெல்கொடவின் உத்தரவின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
விடுதலைப் புலிகள் இயக்கத்
(4ம்பக்கம் பார்க்க)

## கொழும்பில் தேடுதல் வேட்டை தமிழ் இளைஞர் பலர் கைது

(கொழும்பு)
கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படுவோரைக் கைதுசெய்வதற்காக பொலிசாரும், பாதுகாப்புப்படையினரும் தற்போது தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.
பொலிசாரும், பாதுகாப்புப்படையினரும் இப்போது கொழும்பிலுள்ள வீடுகள், ஹோட்டல்கள், லொட்ஜுகள்
(4-ம் பக்கம் பார்க்க)

## விளம்பரம்

### தேவை

சுவீற்ஸ் பேக்கரி சகலவித மான பலகார வகைகளும் இனிப்புப் பண்டங்களும் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர் தேவை. நேரில் வரவும்: Tower Coffee & Cool Bar 324, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (ஏ-3605)

### "மீரா" வரப்போறு துள்ளி வரப்போறு!

"மீரா" வரப்போறு, தாமரைச் செல்வி எழுதும் "தாகம்" புதிய நாவலுடன் "மீரா" பிரசுரமாக விற்பனையாகின்றது. பூபாலசிங்கம் ஸ்ரீகாந், சைத்தம் புத்தகசாலைகளில் யாழ்ப்பாணம் (சி-616)

### விற்பனையாகின்றது

பாலாஜியின் விடுகதை புதிர்கள் 150. யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும், தர்க்கா சுன்னாகம், மொடன் (நவீன களஞ்சியம்) நெல்லியடி, சிவம் சாவகச்சேரி, பிபெஸ் (B) கிளிநொச்சி விலை: 20. ஏ-3556

### அராலியூராரின் நாடகங்க

அராலியூர் சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை பல வானொலி நிலையங்கள் ஒலிபரப்புகின்றன. நீங்களும் நடித்துப் பாருங்களேன்! மாணவரும் நடிக்கலாம். நூல்கள்-1, செட்டிக்காரர்கள்-2, முதலாம்பிள்ளை 36/-. (சி-577)

### வியாழ மாற்றம்

விளக்கமான பலாபலன்கள் அதிக பக்கங்களில் எல்லா இராசிகளுக்கும் ஓராண்டுக்கான பலாபலன்கள் பரிகார ஆலோசனைகள் எழுதப்பட்ட நூல். சன் மாஸ்ரரின் ஆக்கம் கேட்டு வாங்கிப் பயனடையுங்கள். எங்கும் கிடைக்கும். சோமிதர வாழ். ஏசி. (சி-617)

## கோட்டை ரீதியில் நடைபெறும் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தையொட்டி இன்று 23 ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும் கருத்தரங்குகள் வருமாறு:

நல்லூர் வட்டம் இரவு 7.30 மணிக்கு கோண்டாவில் மகா வித்தியாலயத்திலும்; சண்டிலிப்பாய் வட்டத்தில் இரவு 7.30 மணிக்கு அராலி வடக்கு மயிலப் புலம் கந்தசுவாமி கோவில் முன்றலிலும், கொடிகாமம் வட்டத்தில்; வரணி மகா வித்தியாலயத்திலும் இரவு 8மணிக்கும், கைதடி வட்டத்தில்; இரவு 8 மணிக்கு நாவற்குழி மகா வித்தியாலயத்திலும்.

பருத்தித்துறை வட்டத்தில் இரவு 7 மணிக்கு புலோலி கிழக்கு சிவன் கோவில் முன்றலிலும், தீவக வட்டத்தில்; இரவு 7.30 மணிக்கு அல்லாலை மணியரசன்குடியிருப்பு பகுதியிலும் வடமராட்சி யாழ் மாவட்டத்தின ரால் வலிகாமம் கிழக்கு வட்டத்தில் இரவு 7 மணிக்கு குரு நகர் சனசமூக நிலையத்திலும், வடமராட்சி கிழக்கு வட்டத்தில் 7.00 மணிக்கு மாமுனை விளையாட்டு மைதானத்தில் கருத்தரங்குகள் நடைபெறும். (கசி)

## இராசிபலன்

23 - 11 - 1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு கார்த்திகை 8)

தசமி பி. இ. 3-26 வரை. பூரட்டாதி மாலை 6-55 வரை மரணயோகம் இராகுகாலம் மாலை 3-11 முதல் 4-41 வரை சுபநேரம் காலை 10-41 முதல் 12-11 வரை.

மேடம்: மனவலிமை. தொழில் சிறப்பு, அறிஞர் விவாதம்.

இடபம்: மேலதிக வேலை, தெய்வ ஞானம், புதிய முயற்சி

மிதுனம்: தொழில் போட்டி, குடும்ப மனஸ்தாபம், கண்டிப்பு

கடகம்: பணநெருக்கடி, மனசஞ்சலம், குடும்ப அலைச்சல்.

சிம்மம்: காரிய சித்தி, விருந்தினர் வருகை, புத்தி மேன்மை.

கன்னி: கல்வியால் சிறப்பு, கருத்து முரண்பாடு, மனைவியின் பெருமை.

துலாம்: பழைய பகைமை, நண்பர் வெறுப்பு, மனச்சுமை

விருச்சிகம்: பழிதீர்த்தல், வழித்தொல்லை, குடும்பபிரிவு

தனுசு: சுபகாரிய நிகழ்வு, உறவினர் சகாயம், தெய்வீக செலவு

மகரம்: புறம்கூறுதல், பெரியோர் துன்பம், காரியதடை.

கும்பம்: தொழில் வாய்ப்பு, பணவரவு, புத்திரர் பெருமை

மீனம்: அலைவரி துயர், வீண்சச்சரவு, உடல் ஆரோக்கிய குறைவு.

—ஜோஸ்யர்.

## வீதி நாடகம்

(சாவகச்சேரி)

சிறிலங்கா படைகளின் அக்குதல்களை சித்தரித்தும், இந்த மாவீரர் வாரத்தில் நம் இல்லங்கள் தோறும் போற்றி அஞ்சலி செய்ய வேண்டியதன் அவசியத்தை எடுத்து இயம்பும் எழுச்சிமிகு வீதி நாடகம் ஒன்றை சாவகச்சேரி வட்ட கலை பண்பாட்டுக் கழகம் மாவீரர் நாளை யொட்டி சாவகச்சேரிப் பகுதிகளில் நடாத்தி வருகின்றது .155-சி

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 28-09-1967

★

★ ★ ★ ★

★

மண்ணிற்காக: 23-11-1990

### முருகேசு மகேந்திரன்

(2 ஆம் லெப். யேசு)

எங்கள் வீட்டின் விடிவிளக்கே
அப்பா, அம்மா, சகோதரர்களை
அங்கேடக் துரும்பாய் அலையவிட்டு
மண்ணிற்காக உயிர் நீத்து
மாவீரன் ஆகிவிட்டாய்
மாங்குலம் தகர்ப்பினிலே - தம்பி
நொந்த மனச்சுமையுடனே
தொடுக்கின்றோம் துயர் மாலை.

தாய், சகோதரர்கள், உறவினர்கள்.

மகேந்திரன் வீதி,
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (சி 612)

## இதய அஞ்சலி!

யாழ்ப்பாணம் ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை
முன்னாள் உரிமையாளரும்,
மறவன்புலோவைச் சேர்ந்தவருமான
ஆசிரியர்

### திரு. மு. கணபதிப்பிள்ளை

அவர்கள்

19-11-1993 வெள்ளிக்கிழமை அன்று
சென்னையில் இறைபதம் எய்தியுள்ளார் என்பதை
உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள்
யாவருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தோடு
தெரியப்படுத்திக்கொள்வதுடன்,
எமது இதய அஞ்சலியை
சமர்ப்பிக்கின்றோம்.

திரு. சண்முகம் சிவராமன்
ஸ்ரீ லங்கா அச்சகம்,
ஸ்ரீ காந்தா அச்சகம், புத்தகசாலை.
330, 336, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (ஏ-3608)


**பகவான் சத்திய சாயிபாபா ஜனனதினத்தை அனைவரும் வாழ்த்தி பரவசப்படுத்துவோம்!**

ஓம் சாயிராம் ஓம் சாயிராம் ஓம் சாயிராம்

★ உம்மிடையில் சங்கு சக்கரம் கதை தாமரை இவற்றை ஏந்திய நாராயணனாக யான் தோன்றியிருப்பேனாகில் என்னை ஒரு பொருட்காட்சிசாலையில் அடைத்து எனது தரிசனத்திற்காக பணம் வசூல் செய்திருப்பீர்கள். ஒரு சாதாரண மனிதனாக வந்திருப்பேனாகில், எனது போதனையை மதித்திருக்கமாட்டீர்கள். உமது நன்மையின் பொருட்டு அதைக் கடைப்பிடித்திருக்கவும் மாட்டீர்கள். அதனாலேயே தெய்வீகமும், அமானுஷ்ய ஆற்றலும் பெற்ற மனித உருவைப் பெற்றுள்ளேன்.

★ "தான் வந்த காரணத்திற்கான வேலையை நான் இன்னம் தொடங்கவில்லை. நான் இன்னம் ஆரம்பகால ஆய்வையே செய்து வருகிறேன். எனது பெரும் பணியைத் தொடங்கும்பொழுது, இவ்வுலகமே அதனை அறிந்து அதனால் பயன்பெறும்"

— பகவான் சத்யசாயி பாபா

# பகவான் மருந்தகம்

221, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

★ உலக அவதார புருஷர்...ஸ்ரீ சத்தியசாயிபாபா அவதரித்த தினம் எம்மவர்களுக்கு விடிவுநாள்... வாழ்த்துவோம்!
ஓம் சாயிராம் துணை...சாயிராம் ஜெயராம். சாயிராம் ஜெயராம்!

★ சகலவிதமான ஆங்கில மருந்து வகைகளின் நம்பிக்கைபெற்ற வியாபாரிகள்

# எஸ்ரீ மெடிக்கல்ஸ்

490, மருத்துவமனை வீதி [O. P. D. முன்பாக] யாழ்ப்பாணம்.

ஃ அவதார புருஷர் ஆன்மீகத்தின் ஒளிவிளக்கு பகவான் ஸ்ரீ சத்தியசாயி அவதாரமெடுத்த தினத்தை துதிப்போம். ஓம் சாயிராம்! ஜெயராம்!! ஓம் சாயிராம் ஜெயராம்!!!

★ கண்ணைக் கவரும் வண்ண நகைகளின் எழில்கோலம்

★ இன்றைய நாகரீகத்துக்கு அமைவாக 22 கரட் தங்க நகைகளை வழங்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

# நதியா ஜுவல்லறி

02, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்

**மணிவாக்கு**

"நாம் நீண்டகாலம் அழுது புலம்பி விட்டோம். இனிமேல் அழுகைக்கு இடமில்லை. உங்கள் பலத்தைக் கொண்டே எழுந்து நில்லுங்கள், வாழுங்கள்".

— சுவாமி விவேகானந்தர்

# நாலாயிரம் இலங்கையர் 'எயிட்ஸ்' கிருமியால் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் நாலாயிரம் பேருக்கு எயிட்ஸ் நோய் கிருமிகள் தொற்றியிருப்பதாக கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் தெரிவிக்கப்பட்டது.

எயிட்ஸ் நோயினால் இலங்கையில் இதுவரை 26பேர் மரணமாகி விட்டதாகவும், இதில் 24 பேர் வெளிநாடுகளில் நீண்டகாலம் தங்கியிட்டு இலங்கைக்கு வந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பெரும்பாலும் வெளிநாட்டவர்களினாலேயே இந்தநோய் இங்கு பரவும் சாத்தியங்களுங்கள் இருப்பதாக இந்தக் கருத்தரங்கில் கூறப்பட்டுள்ளது. (பி இ ஐ)

# இன்று

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு சனசமூக நிலையமும் இந்து இளைஞர் மன்றமும் வருடந்தோறும் மாவீரர் வாரத்தை முன்னிட்டு நடாத்திவரும் சதுரங்கம் ஆகிய சுற்றுப்போட்டிகளுக்கான பரிசளிப்பு வைபவம் நிலைய மண்டபத்தில் இன்று செவ்வாய் மாலை ஆறு மணிக்கு நிலைய தலைவர் திரு. த. இ. பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினராக கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. சேரலாதன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்குவார். இந் நிகழ்வில் மாவீரர் பெற்றோர்களும் கௌரவிக்கப்படுவார்கள். (இ

★

(யாழ்ப்பாணம்)

கன்னாதிட்டி மயிலணி வீதியில் அமைந்துள்ள பகவான் ஸ்ரீசத்யசாயி பஜனை நிலையத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3-00 மணிக்கு பகவானின் 68வது அவதார தினவிழா ஆரம்பமாகி பஜனைப் பாடல்கள் பாலவிகாஸ் மாணவர்களின் இறப்பு நிகழ்ச்சியாக நடனம், நாடகம் இடம் பெறும். இதைத்தொடர்ந்து

[4-ம் பக்கம் பார்க்க]

# நமது நோக்கு

## மண் மீட்பு!

எமது பிரதேசத்தின் ஒரு பகுதி ஆக்கிரமிப்பாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. இடம் பெயர்ந்த மக்கள் அகதிகளாக, பல கஷ்டங்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இழந்த பிரதேசத்தை மீட்டு, மக்களை மீண்டும் அதேயிடத்தில் குடியேற்ற வேண்டியது அவசியம்.

ஏற்கனவே, பல்லாண்டு காலமாக கிழக்கு மாகாணத்தில் திட்டமிட்ட அரச குடியேற்றங்களால், நிலம் பறிபோனது. பண்டா — செல்வா ஒப்பந்தத்தில், அத்துமீறல் குடியேற்றங்கள் நிறுத்தப்படும் என ஒப்புக் கொள்ளப்பட்டது ஆனால் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட காரணத்தால், அரச குடியேற்றம் தொடர்ந்தது; தொடருகிறது.

இதேவேளை, எமது பிரதேசத்தில் உள்ள மண்ணின் ஒரு பகுதி தரிசாக, கடல்நீர் புகுவதால் உவர் நிலமாக மாறியிருப்பதால், விவசாயத்திற்கோ மக்கள் குடியேறி வாழ்வதற்கோ தகுதியற்றதாக விளங்குகிறது.

இந்த மண்ணை மீட்டிட முயற்சி எடுக்கப்பட வேண்டியது அவசியம்.

உப்பாற்றைச் சுற்றியுள்ள மண்ணை மீட்டிட 1940ல், நீர்ப்பாசன அதிகாரியாக இருந்த கே. பாலசிங்கத்தின் முயற்சி போற்றுதற்குரியது. இதனைத் தொடர்ந்து திரு. வெப் என்பவரால் எடுத்த முயற்சி, கிரைது சுகநலப் போக்கினால் தடைப்பட்டது வருந்தத்தக்கதே.

காரியாதிகாரி க. முருகேசம்பிள்ளை, வலிகிழக்கு கிராம முன்னேற்றச் சங்க சமாச நிர்வாகிகள் ஆகியோர் எடுத்த முயற்சியும் பூரண வெற்றி தரவில்லை.

ஆனால், தற்போது, தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், திருநெல்வேலி விவசாய ஆராய்ச்சிநிலையம், யாழ். பல்கலைக்கழகம் போன்ற பொது நிறுவனங்களின் ஒத்துழைப்போடு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

நன்னீர் மீன் வளர்ப்பு, உவர் மண்ணுக்கு ஏற்ற நெற்பயிர்ச் செய்கை உவர்த்தன்மையை அள்ளிடுவது போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுமக்கள் இத்தகைய நடவடிக்கைகளில் பங்குபற்றி, பூரண ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்பதை வலியுறுத்த விரும்புகிறோம்.

# ★ யுத்தம் மூண்டால் —— 'சியோலே' ஓரிரு வாரத்தில் வடகொரியா கைப்பற்றும்

(டோக்கியோ)

கொரியத் தீபகற்பத்தில் போர்மூளும் பட்சத்தில் ஓரிரு வாரங்களுக்குள் வடகொரிய இராணுவம் தென்கொரியத் தலைநகர் சியோலை கைப்பற்றிவிடுமென அமெரிக்காவின் பிரபல சஞ்சிகையான "நியூஸ் வீக்" தெரிவித்துள்ளது.

இரு நாடுகளுக்குமிடையே உள்ள "டி. எம். இ" எனப்படும் இராணுவமற்ற பகுதியை நோக்கி வடகொரியா மிகப் பெரிய தாக்குதலை நடாத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் "நியூஸ் வீக்" கூறியுள்ளது.

இதேவேளை வடகொரிய இராணுவத்தின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் குறித்தும் தாம் பெரிதும் கவனத்தோடு இருந்து வருவதாகவும் வடகொரியாவின் அணு ஆயுத சக்தி குறித்தும் இராணுவ படைபலம் குறித்தும் தாங்கள் கவலையடைந்திருப்பதாகவும் தென்கொரிய வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார். -சி

# பயணிகள் விமானம் வீழ்ந்து 115 பேர் பலி


(லண்டன்)

முன்னாள் யூகோசிலாவியாவின் மசிடோனியாவின் தென் பகுதியில் பயணிகள் விமானமொன்று நேற்றுமுன்தினம் விழுந்துநொருங்கியதில் 115 பயணிகள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

ஜெனிவாவிலிருந்து மசிடோனியாவுக்கு சென்று கொண்டிருந்தபோதே இவ் விமானம் பனிமலைப் பிரதேசம் ஒன்றில் விழுந்து நொருங்கியது.

கருகிய சடலங்கள் ஆங்காங்கே காணப்படுவதாகவும் மீட்புப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (க-வி)

# இன்று —— சத்யசாயிபாபாவின் 68வது அவதாரதினம்



பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 68வது அவதார தினமான இன்று பகவானின் தெய்வீக தன்மையை உணர்ந்து அவரின் அவதார இலட்சியத்தை அறிந்து கொள்ள முயற்சித்தல் சிறந்தது.

பகவான் கூறுவதாவது; உங்கள் உள்ளங்களில் ஒளி விளக்கை ஏற்றிவைப்பதற்காகவே நான் வந்துள்ளேன். ஓர் குறிப்பிட்ட பிரிவினருக்காகவோ மதத்தினருக்காகவோ நான் வரவில்லை. எனக்குப் பக்தர்களையோ சீடர்களையோ தேடிக்கொள்ளும் எந்தத்திட்டமும் எனக்கில்லை. பொதுவான பிரேமை வழியே யாவருக்கும் பொருந்தும். ஆகவே பிரேமை தத்துவத்தைப் போதித்து அதன்படி வாழ்ந்து காட்டி உங்களையும் அதைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதே எனது நோக்கம். எல்லா மொழிகளிலும், எல்லா உருவங்களிலும் பெயர்களிலும் பலரும் வழிபடுவது அந்த ஒரே இறைவனைத்தான். அவரை வழிபடுவது பிரேமையின் பிணைப்பினாலேயே சாத்தியமாகும். எத்தேசத்தினரும், எவ்வினத்தினரும் சகோதர உணர்வுடன் பிரேமையை வளர்த்துக் கொள்ளுங்கள். இதுவே என் அன்புச்செய்தி.

அவர் மேலும் கூறுகையில்; இந்த அவதாரம் தீயவர்களை அழிக்கமாட்டாது. அவர்களின் பிழைகளைச் சரிசெய்து, சீர்திருத்திக் கல்வி பயிற்றுவித்து எந்தநல்ல பாதையிலிருந்து வழி தவறி வந்தார்களோ அந்தப் பாதைக்குத் திரும்பவும் வழி நடத்தப்படுவர். இந்த அவதாரத்திற்கு ஜெபம், தியானம், யோகம் ஆகிய சாதனைகள் இல்லை. இந்த அவதாரத்திற்குக் கடவுள் வழிபாடு என்பதே தெரியாது. ஏதாவது ஒன்றிற்குப் பிரார்த்தனை செய்யமாட்டாது. ஏனெனில் இதுதான் மிக உயர்ந்த அந்தஸ்தில் உள்ளது. அது நீங்கள் கடவுள் வழிபாடுசெய்யவும் பிரார்த்தனை செய்யவும் உங்களைக் கற்பிக்கும் என்னை அழைப்பதற்கு முயலாதீர்கள். யார் முயன்றாலும் எவ்விதம் ஆராய்ந்தாலும் எத்தனை காலம் தவம் இருந்தாலும் என் தத்துவம் மக்களுக்கு விளங்காது. எனக்கென்று தனிப்பெயர் ஏதுமில்லை, எல்லாப் பெயர்களுமே என்னுடையவைதான். எந்தப் பெயரால் அழைத்தாலும் நான் உடனே பதிலளிப்பேன் எனவும் கூறியுள்ளார்.

இவ்வாறு பகவான் திருவாய்மலர்ந்தருளியதை இன்றைய அவதார தினத்தில் நினைவுகூர்ந்து மேலும் "எனக்குப் பக்தனாக மாறுதே எனது உபதேசங்களுக்கு பக்தனாக மாறு" என பகவான் அன்மையில் கூறிய தெய்வ வாக்கை மனதில் கொள்ளவேண்டும்.

மா. தேவராசா

**காடு வளர்த்தால் - செழிக்கும் நாடு வளத்தால்**


# அளவெட்டி — மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது)

உரும்பிராய் வீதி, மருதனமடம்

# முக்கிய அறிவித்தல்

## கிளைக்குழுத் தேர்தல் 1993

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுக்கள் தெரிவிற்கான நியமனப் பத்திரங்கள் பின்வரும் திகதியில் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

01. நியமனப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:

04-12-93 சனிக்கிழமை

காலம் — மு. ப. 9-00 மணி தொடக்கம் 12 மணி வரை.

அபேட்சகர்கள் நியமனத்தில் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் அன்றைய தினம் மு. ப. 10-00 மணி தொடக்கம் 11-00 மணி வரை தேர்தல் உதவியோகத்தரிடம் எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

02. தேர்தல் நடைபெறும் திகதி:

04-12-93 சனிக்கிழமை

நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடங்களின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| கிளை இலக்கம் | ஏற்றுக்கொள்ளப்படும் இடம் |
|---|---|
| 01. | இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் அருகாமையில் உள்ள நிவாரண நிலையம் |
| 02. | சீரணிச் சந்தி, சண்டிலிப்பாய் நிவாரண நிலையம் |
| 03. | அளவெட்டி தெற்கு ஆலடி 3-வது கிளை |
| 04. | கோண்டாவில் இ. போ. ச. டிப்போ வீதியிலுள்ள நிவாரண நிலையம் |
| 05. | உரும்பிராய் நிவாரண நிலையம் |
| 06. | அளவெட்டி தெற்கு, ஆலடி, 3-வது கிளை |
| 07. | அளவெட்டி தெற்கு, 7-வது கிளை |
| 08. | மல்லாகம் சந்தி, கிளை 08 |
| 09. | கல்லாரை, மல்லாகம் கிளை 09 |
| 10. | மல்லாகம் சந்தி, கிளை 10 |
| 11. | கலைநகர், அளவெட்டி தெற்கு கிளை 11 |
| 12. | நீதிமன்ற வீதி, மல்லாகம் கிளை 12 |

நா. தவநாதன்,
தேர்தல் உதவியோகத்தர்.

கூட்டுறவு அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
16-11-93.

(ஏ-3601)

## பகுதி நேர ஆங்கில ஆசிரியர்:
# வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுக்கு விண்ணப்பங்கள்

(திருநெல்வேலி)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பித்தவர்களுடைய விண்ணப்பங்கள் விரைவில் வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நூற்றுக்கணக்கானோர் பகுதிநேர ஒப்பந்த அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் பதவிக்கு விண்ணப்பித்துள்ளனர்.

இவை விரைவில் பரிசீலிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [157 - இ]

## படையினர் பொது மக்கள் மீது சூடு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் மாட்டு வண்டி ஒன்றில் வந்துகொண்டிருந்தவர்கள் மீது ராணுவத்தினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர். இதில் எட்டு பேர் பலியானார்கள்.

இவர்கள் அனைவரும் பொது மக்களாகவே இருக்கக்கூடுமென பி. பி. ஸி. தெரிவித்தது. (வி-இ)

## படை பலவீனமடைந்ததற்கு பூநகரி எடுத்துக்காட்டு
### எதிரணி ஆவேசம்

(கொழும்பு)

சேவையிலிருந்து ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரிகளை மீண்டும்மீண்டும் ராணுவ உயர் பதவிகளில் நியமிப்பதினாலேயே ராணுவம் வலுவிழந்து வருவதாக நேற்று நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றம் சாட்டினர்கள்.

ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளை மீண்டும் உயர்பதவிகளுக்கு நியமிப்பதனால் அவர்கள் தமது பதவிகளை பாதுகாத்துக் கொள்வதிலும், வருமானத்தில் கவனம் செலுத்துவதிலும் மாத்திரமே அக்கறை காட்டி வருகின்றனர்.

இதனால்தான் இராணுவம் வலுவிழந்துவருகின்றது என்பதற்கு பூநகரி மோதல் ஒரு எடுத்துக்காட்டாகும் என்று எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டினர்கள். (வி இ)

# மாவீரர் வார வேலைத் திட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தையொட்டி யாழ் மாவட்டத்தில் இன்று 23-ம் திகதிசெவ்வாய்க்கிழமை நடைபெறும் சிரமதான வேலைத்திட்டங்களின் விபரம்:

நல்லூர் வட்டம்; வண்ணார் பண்ணை வடமேற்கு, காலை 10 மணிக்கு வண்ணார்பண்ணை ஐயனார் பிள்ளையார் கோவில் வீதி துப்புரவு செய்தல் - மரக்கன்றுகள் நடுதல். வண்ணார் பண்ணை வடக்கு பிற்பகல் 3 மணிக்கு பட்டுவெளி வயல்கரை விவசாய வீதியில் தூர்ந்து போயுள்ள அணைக்கட்டை புனரமைத்தல்.

சண்டிலிப்பாய் வட்டம்; பிரான்பற்று காலை 9 மணிக்கு வெள்ள வாய்க்கால் துப்புரவு செய்தல். நவாலி வடக்கு காலை 9 மணிக்கு வாய்க்கால் துப்பரவு செய்தல். மானிப்பாய் தெற்கு காலை 9 மணிக்கு சோதி வேம்படி வீதி துப்பரவு செய்தல்.

உடுவில் வட்டம்: சங்குவேலி காலை 9 மணிக்கு விவசாயவீதி துப்பரவு செய்தல்.

சங்கானை வட்டம்: வட்டுக்கோட்டை கிழக்கு காலை 9 மணிக்கு பிரசாத் வீதி துப்பரவு செய்தல். சுழிபுரம்மேற்கு, காலை 9 மணிக்கு சுக்லவேம்படி வீதி துப்பரவு செய்தல், அராலி வடக்கு காலை 9 மணிக்கு டச்வீதி துப்பரவு செய்தல் -வி இ

## அதிபர்கள் கூட்டம் பின் போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

இன்று செவ்வாய்க்கிழமை பி. ப. 3 மணிக்கு யூனியன் கல்லூரியில் நிகழவிருந்த தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட அதிபர்கள் கூட்டம் நாளை (புதன்கிழமை) பி. ப. 3 மணிக்கு நடைபெறுமென கோட்டப்பிரதிக்கல்விப்பணிப்பாளர் த. துரைலிங்கம் அறிவித்துள்ளார். இ]

**இன்று**
(3-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. குமாரசாமியின் இறப்புரையும் திருவூஞ்சலும் நடைபெறும். (இ)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை விசாலாட்சி

புங்குடுதீவு 6-ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், இலக்கம் 7, பிரப்பங்குளம் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை விசாலாட்சி 22-11-1993இல் காலமானார். இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை (வர்த்தகர், யாழ்ப்பாணம்) அவர்களின் அன்பு மனைவியும், பத்மாவதி (ஆசிரியை, யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), பஞ்சாட்சரம் (பிரதம எழுதுவினைஞர், கச்சேரி யாழ்ப்பாணம்), செல்வத்துரை வருமானவரி இலாகா, கொழும்பு), சரஸ்வதி யோகேஸ்வரி (கட்டிட திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமைத் தாயாரும், திருமதி தியாகராசா கனகம்மாவின் சிறியதாயாரும், சு. மகாலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), ப. இராசேஸ்வரி, செ. மங்களேஸ்வரி, கா. சுந்தரலிங்கம் (பிரதம எழுதுவினைஞர், கச்சேரி, யாழ்ப்பாணம்), க. குழந்தைவேலு (யாழ்ப்பாணமாநகரசபை), ஆகியோரின் அன்பு மாமியும், குருபரவேள் (கனடா), பூங்கோதை (மொறட்டுவை பல்கலைக்கழகம்), நந்தகுமார் (கனடா), சுகந்தி, மாலினி (கனடா), துஷ்யந்தி யாழ். இந்து மகளிர் கல்லூரி), மயூரன் (பரியோவான் கல்லூரி), செந்தூரன் (யாழ் இந்துக்கல்லூரி), ரமேஸ்குமார் (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி), நிரஞ்சலா (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி, ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23 - 11 - 1993) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 4-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: க. பஞ்சாட்சரம், (மகன்)

இல: 7 பிரப்பங்குளம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். [சி-618]

**பூநகரி அழிவை**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

வடபிராந்தியத்தின் தளபதி மேஜர் ஜெனரல் ஹெஷான் தலுவத்தவின் நேரடி அதிகாரத்தின் கீழ் பிரிகேடியர் அசோகா ஜெயவர்த்தன செயல்படுவார். (இ)

**இராணுவத்தில்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தளபதியாக கேணல் சரத் முனசிங்காவும், ஊர்காவற்றுறை, மண்டைதீவு படைப் பிரிவின் தளபதியாக ரி. என். பேரராவும், பூநகரி படைப் பிரிவின் தளபதியாக கேணல் சரத்கொடவும் நியமிக்கப் பட்டுள்ளனர். (இ)

**கொழும்பில்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் தங்குமிடங்கள் போன்றவற்றில் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் அவற்றை கண்காணித்தும் வருகின்றனர்.

கடந்த சில நாட்களாக மேற்கொள்ளப்பட்ட இத்தேடுதல் நடவடிக்கைகளின் போது வடக்கு கிழக்கும் பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வந்த இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தொடர்ந்து விசாரிக்கப்பட்டுவருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ)

**களனிப்**
1-ம் பக்கத் தொடர்ச்சி)

யைச் சேர்ந்த 7 முக்கிய உறுப்பினர்கள் இந்தக் குழுவில் அடங்கி இருந்தனராம்.

பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு இவர்கள் பற்றிய விபரங்களை வெளியிடப் பாதுகாப்பு வட்டாரங்கள் மறுத்ததாகவும் ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

இவர்கள் தற்போது தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

1990ம் ஆண்டு யூன் மாதம் களுமுனை பொலிஸ்நிலையத்தை தாக்கிய குழுவுக்குத் தலைமை வகித்த ஒருவரும் இக்குழுவில் இருப்பதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாம் -இ

**யாழ்., மீசாலைப்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த பிரசாத் (07 வயது) சிறுவனும் காயமடைந்தனர். பல வீடுகளும் சேதமடைந்தன.

புக்காரா விமானம் நேற்று அதிகாலை 6-00 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் கட்டமிட்டு மீசாலை வயல் வெளியொன்றில் குண்டொன்றை வீசியதில் ஒரு பகுதி நெற்பயிர்கள் அழிந்ததுடன் வயல்வெளிக்கு அருகிலிருந்த இரு வீடுகளும் சேதமடைந்தன

இதைத் தொடர்ந்து 6-10 மணியளவில் மேற்படி விமானம் யாழ் நகரிலும் இரு குண்டுகளை வீசியதில் இரு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். பெரிய மரங்கள் பலவும் முறிந்தன, சில வீடுகளும் சேதமடைந்தன.

புக்காரா விமானம் குண்டு வீச்சு நேற்று கட்டுவன் பகுதியிலும் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (157-161-59-வி-இ)

# இருமிநாசினிகளால் வரும் மரணங்கள் அதிகரிப்பு

(கொழும்பு

விவசாய கிருமிநாசினிகளால் ஏற்படும் மரணங்களில் இலங்கையில் நான்காவது இடத்தை வகிப்பதாக, வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன

விவசாய கிருமிநாசினிகளை, விவசாயிகள் முறையாகப் பாவிக்கத் தவறுவதினால் இந்த மரணங்கள் நிகழ்கின்றன கிருமிநாசினிகளினால் கடந்த வருடம் 1670 பேர் மரணமாகியுள்ளனர்

விவசாயிகளின் கவனக்குறைவினால் வருடாந்தம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான விவசாயிகள் பாதிப்புக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

பெரும்பாலான விவசாயிகள் இருதய நோயினால் பாதிக்கப்படுவதாக, வைத்திய அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன. (வி-இ)

## தமிழ் தினப் போட்டி

இவ்வாண்டுக்கான யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கான தமிழ் தினப்போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. கோட்ட/மாவட்டப் போட்டிகளில் வெற்றிபெற்ற மூவருக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இன்று பிற்பகல் வழங்கப்படவிருப்பதுடன் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவிருப்பதாகவும் கல்வித்திணைக்கள வட்டாரம் தெரிவித்துள்ளது.

**மாவீரர் வாரத்தில்**
1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் இந்தக் காலத்தின்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் எனப் பாதுகாப்பு அமைச்சுக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாக நாடு முழுவதும் பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

**தேர்தலுக்கு**
1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி தேர்தலை ஒத்திவைப்பதற்கான பேச்சுவார்த்தைகளில், அரசுக்கும், கிழக்கு மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் ஓர் இணக்கம் காணப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றபோதிலும், இதனால் அரசு வருங்காலத்தில் பல எதிர்ப்புகளுக்கு முகம்கொடுக்கவேண்டி ஏற்படலாம் என பி. பி. ஸி. தெரிவித்தது. (வி-இ)

**புலிகள்**
1ம் பக்கத் தொடர்ச்சி

வித்தன.

கிழக்குப் பகுதியில் மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் விடுதலைப் புலிகள் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதில் 5 படையினர் பலியானது தெரிந்ததே.

கிழக்கில் புலிகளின் புதிய தாக்குதல்களை அடுத்து அங்கு நடைபெறவிருந்த உள்ளூராட்சித் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை அரசு பின் போடலாம் எனத் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் டிசம்பர் மாதம் மேற்படி தேர்தலுக்கு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்யமுடியும் என அரசு ஏற்கனவே அறிவித்திருந்ததும் தெரிந்ததே. -இ

**பூநகரி தாக்குதலில்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்தினரும் கடற்படையினரும் இதில் அடங்குவர். மேற்படி தொகையினர் பூநகரி தாக்குதலில் பலியாயிருக்கலாம் அல்லது காணாமலும் போயிருக்கலாம்.

ராணுவத்தில் 17 அதிகாரிகள் பலியானார்கள். 620 சிப்பாய்கள் உயிரிழந்துள்ளனர்.

கடற்படை அதிகாரிகள் இருவரும் கடற்படையினர் 17 பேரும் இந்த மோதலில் பலியானார்கள். 550 படையினர் இதில் காயமடைந்தனர் எனவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (இ)

**தமிழர் பகுதிகளில்**
(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இன்னல் அனுபவிப்பதுடன் தமது அன்றாட கடமைகளை மேற்கொள்வதற்கும் சிரமப்படுகின்றனர்.

மேலும் வெளியிடங்களில் இருந்து வர்த்தக அலுவல்கள் நிமித்தம் இப்பிரதேசத்திற்குவரும் தமிழர்களும் ராணுவத்தினரால் இம்சிக்கப் படுகின்றனராம்

முகாமை அண்டிய பகுதிகளில் அடிக்கடி சுற்றிவளைப்புகளும், கைதுகளும் தொடர்ந்து இடம் பெறுவதால் தமிழர்கள் பயத்துடனேயே தமது பெரும் பொழுதைக் கழிக்க வேண்டியுள்ளது.

இப்பகுதியில் ஏற்கனவே 38 ராணுவ முகாம்களும் 5 பொலிஸ் நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (க

**2ம் நாள்**
(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டாடப்பட்டது

நேற்றுக் காலை 9 மணிக்கு தமிழ்ஈழ தேசியக்கொடிக்கு வணக்கம் செலுத்தப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பல்வேறு இடங்களிலும் மாவீரர் வளைவுகளும் அலங்காரப்பந்தல்களும் அமைக்கப்பட்டு அவை எழிற்கோலமாகக் காட்சியளித்தன.

பந்தல்களில் வைக்கப்பட்ட மாவீரர் உருவப்படங்களுக்கு மக்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

பாடசாலைகள், பொதுநிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், சனசமூக நிலையங்களிலும் மாவீரர் உருவப்படங்கள் வைக்கப்பட்டு நிகழ்வுகள் நடைபெற்றன.

வீதி நாடகங்கள், கும்மி, கரகாட்டம் போன்ற நிகழ்வுகளும் நடாத்தப்பட்டன. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், இலக் கோவில் வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு நவம்பர் மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10 336/B: